விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 7 ஷவ்வா 12 இதழ் 130

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 21-6-1986

# "மாகாணசபைசட்டதிட்டங்களில்திருமலைமாவட்டம் அடங்கமாட்டாது 'இந்து' தகவல்

(சென்னை)

'இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வாக அமையும் மாகாண சபைகள் முதல்முதலில் வடக்கு கிழக்குப் பகுதிகளிலேயே அமைக்கப்படவுள்ளன. இதனடிப்படையில் இந்தியாவைப் போன்றதோர் அமைப்பில் ஒவ்வொரு மாகாணங்களுக்கும் ஒவ்வோர் கவர்னர் நியமிக்கப்படுவார்' என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில், இவ்வாறு நியமிக்கப்படும் கவர்னருக்கு சட்ட அதிகாரங்களோ, நிறைவேற்று அதிகாரங்களோ அளிக்கப்படமாட்டாது இந்தமாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட சட்ட ஆக்கங்களை உறுதிப்படுத்தும் அதிகாரம் மட்டுமே இவருக்கு வழங்கப்படும்.

"குறிப்பாக வெளிநாட்டு அலுவல்கள், தேசிய பாதுகாப்பு குறித்தும் இவர்களுக்கு எவ்வித அதிகாரங்களும்இல்லை

"அத்துடன் திருகோணமலை மாவட்டம் மாகாண சபைகளின் சட்ட திட்டங்களுக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## "இனப் பிரச்னைக்கு சரியான தீர்வை அரசுகாணவேண்டும்"
### —கலவானை எம். பி.

[கொழும்பு]

"நாட்டில் இனப்பிரச்னை இருப்பதை ஒப்புக் கொண்டு அதற்கு சரியான தீர்வை அரசு மேற் கொள்ள வேண்டும். எடுக்கப்படும் தீர்வு நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டியது அவசியம்."

இவ்வாறு கலவானைத் தொகுதியின் புதிய எம். பி, திரு. டி. ஈ. குணசேகர பாராளுமன்றத்தில் நேற்றுத்

(8ம் பக்கம் பார்க்க)

# ● தோலகட்டி

# ஆச்சிரமத்தில் அருட்சகோதரர் இராணுவத்தால்சுட்டுக்கொலை

(அலுவலக நிருபர்)

வசாவிளான் தோலகட்டி ஆச்சிரமத்தின் செபமாலைத் தாஸர் சபையைச் சேர்ந்த இந்தியப் பிரஜையான அருட்சகோதரர் மனுவெல் வென்செஸ்லாஸ் (66 வயது) நேற்றுக்காலை 10 மணியளவில், தோலகட்டி ஆச்சிரமத்தில் வைத்து திடீர் தேடுதல் நடத்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அருட்சகோதரர் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி செபமாலைத்தாஸர் சபையைச் சேர்ந்தவர்களுக்கும் கத்தோலிக்கர்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது,

இவர் ஒரு இந்தியப்பிரஜை. கன்னியாகுமரி மாவட்டத்தில் கைத்தான்கரை படுவு கிராமத்தில் பிறந்தவர்.

செபமாலைத்தாஸர் சபையின் தலைமையகம் தமிழ்நாட்டிலுள்ளது, இங்கிருந்து 1950ம் ஆண்டு சபையின் அக்கிளை ஸ்தாபனமான வசாவிளான் தோலகட்டி செபமாலைத் தாஸர் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார்.

வசாவிளான் தோலகட்டி செபமாலைத்தாசர் சபையை மௌன சபை என்று அழைப்பர்.

இச்சபையினர் குறிப்பிட்ட நேரம் தவிர மற்றைய நேரங்களில் மௌன விரதமே அனுஷ்டித்து வந்தவர்கள் ஏற்றத்.

[8-ம் பக்கம் பார்க்க]

## அடகுநகைகள் மீட்கச்சென்றனர்

[அச்சுவேலி]

மக்கள் வங்கி அடகுநகைகளை மீட்பதற்காக நேற்றுக் காலை பலாலி இராணுவ முகாம் நோக்கி மக்கள் அச்சுவேலியில் இருந்து புறப்பாட்டுச் சென்றனர்.

இதேவேளை பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை சரமாரியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்துவசாவிளான், தோலகட்டி, ஒட்டகப்புலம், வளலாய்ப் பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

உயிலங்குளம் சந்தியில்

## இராணுவத்தினர்மீது புலிகள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மன்னார், முருங்கன் இராணுவ முகாமிலிருந்து பொது மக்களின் உதவியோடு இரவோடிரவாக நடைபவனியாக ரோந்துசென்ற இராணுவத்தினரை 'தடுழீழ விடுதலைப்' புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த போராளிகள் எதிர்கொண்டு தாக்குதல் நடாத்தினர்.

இத்தாக்குதலின் பின்னர், உதவிக்குவந்த பொதுமக்களையும் விட்டு விட்டு மீண்டும் இராணுவம் முகாம்நோக்கித் திரும்பிச்சென்றனர்.

இந்த நேரடிமோதல் நேற்று அதிகாலை மன்னார் உயிலங்குளம் சந்தியில் இடம்பெற்றது. (மா)

யாழ். நகரில்

## பட்டப்பகலில் இருபது பவுண் நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டில் நேற்றுக்காலை சுமார் 50,000 ரூபா பெறுமதியான 20 தங்கப்பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியையும் பிள்ளைகளும் பாடசாலைக்கும், அயலவர்கள் கோவிலுக்கும் சென்ற சமயம் இக்கொள்ளை நடந்துள்ளது.

ஆசிரியையின்கணவர் வெளியூரில் வேலைபார்த்து வருவதால் ஆசிரியையும் பிள்ளைகளும் மட்டுமே வசித்து வந்தனர். வீட்டின்பின்பக்க கதவை உடைத்து இக்கொள்ளை நடைபெற்றுள்ளது. (க)

## சாம்பல்தீவு நேரடி மோதலில் பன்னிரண்டு இராணுவம் பலி
### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

[யாழ்ப்பாணம்]

"திருமலை மாவட்டத்தில் சாம்பல்தீவு என்னும் இடத்தில் இராணுவத்தினர்க்கும் மக்கள் விடுதலைப்படையினருக்கும் இடையே இடம் பெற்ற நேரடி மோதலில் பன்னிரெண்டுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள்."

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இறக்கக்கண்டி முகாமிலிருந்தும் வில்க்கம் விகாரை முகாமிலிருந்தும் மூன்று பிரிவுகளாக சுமார் இரண்டாயிரம்இராணுவத்தினர் அணிவகுத்து சாம்பல்தீவுக் கிராமத்தை முற்றுகையிட்டு தேடுதல் நடாத்த வந்துகொண்டிருந்தனர். சாம்பல் தீவை இராணுவம் அண்மித்ததும் மக்கள் விடுதலைப் படையினர் எதிர்த்தாக்குதலை ஆரம்பித்தனர். ஆறுமணி நேரம் இராணுவத்தினருடன் நடாத்திய கடும்சமரில் எமது படையினரின் மோட்டார் தாக்குதலால்12ற்குமேற்பட்ட இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். சிதறிய நிலையில் இராணுவத்தின் உடல்கள் கிடந்தன இத்தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கினர். மக்கள் விடுதலைப்படைத் தரப்பில் எதுவித இழப்புமில்லை.

கடந்த 19ம்தேதி காலை 8-30மணியளவில்முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து கிளிநொச்சி நோக்கி இராணுவத்தினர் நடைபவனியாக

(8ம் பக்கம் பார்க்க)

## "இந்தியாவினை எந்த நிலையிலும் எம்மால் உதாசீனம் செய்யமுடியாது" 'ரெனி' கூறுகிறார்

[கொழும்பு]

'எந்த ஒரு நிலையிலும் இந்தியா எமது இனப்பிரச்னைக்கான தீர்வில் வகிக்கக்கூடிய பெரும்பாத்திரத்தை எம்மால் உதாசீனம் செய்ய முடியாது. இப்பிரச்னைக்கு விரைவான தீர்வு காணப்படுவது அவசரஅவசியமாகிவிட்டது. ஏனெனில் எமக்கு உதவி வழங்கும் நாடுகள் தாம் வழங்கும் உதவி இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தக் கூடாது என நிபந்தனை விதித்திருக்கின்றன.'

இலங்கை நிதியமைச்சர் திரு. ரொனி டீ மெல் பாரிஸுக்கு புறப்படுமுன்னர் நிருபர்களுக்களித்த பேட்டியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

[illegible] இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளினது பாரிஸ் கூட்டத்தில் பதினொரு மேற்குலக நாடுகளும் ஜப்பானும் கூடிய சலுகை அடிப்படையில் 70·3 கோடி டாலர்களை இலங்கைக்கு வழங்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

இருந்த பொழுதிலும், இந்நாடுகள் இலங்கை இனப்பிரச்னை இழுபறியாகத் தொடர்வது பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்த அதே வேளையில் விரைவில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். [ஷ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அராலி தெற்கு அம்மன் கோவிலடியில் அமைந்துள்ள ''கிலுவானை'' என்னும் 17½ பரப்புக்காணி சுற்றுமதிலுடன் விற்பனைக்குண்டு. நா. தனபாலசிங்கம், 123/1 கோயில் வீதி, யாழ்ப்பாணம். [C 2923]

மலிவான விலையில்முட்டை, இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. வெடித்த முட்டை ஒன்று ரூ.1/-க்கு விற்கப்படும். தொடர்பு: MAC சிவாஞபாம், 111, முஸ்லிம் கல்லூரி வீதி (ஒஸ்மானியாகல்லூரிக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (C 2984)

### சேவை

புதுப்பிக்கப்பட்ட ஹொண்டா C70, C 90 ஓடர்களுக்கு எடுத்து கொடுக்கப்படும். J P. T. Ltd, 3 நவீன சந்தை, [மேல் மாடி] யாழ்ப்பாணம். (A 742)

### தேவை

இயந்திரத்தில் வேலைசெய்ய அனுபவமுள்ள தச்சுத் தொழிலாளர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு உடன் நேரில் வரவும். வெ. தேவசீலன், குப்பிளான் சந்தி, ஏழாலை. C 2963

நல்ல நிலையில் உள்ள 20'' Sony அல்லது National கலர் T. V. தேவை. தொடர்பு கொள்ளவும். குயிக் ஸ்ரார் (Quick Star) 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 3005

### வகுப்புகள்

கிற்றார், வயலின், வீணை, மிருதங்க, நடன, மனையியல், தட்டச்சு, சுருக்கெழுத்து, அலங்கார பொருட்கள் செய்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன. விபரங்களுக்கு: மேபெ(F)யர் அக்கடமி, 108, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [C 2965]

I C M A Professional stage II வகுப்புகளுக்குஉடன்தொடர்பு கொள்ளவும். ஏனைய வகுப்புகள் ஏற்கெனவே ஆரம்பமாகி உள்ளன. Rapid Results Institute 221, கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். C 2997

கணக்கியல் நிதி சம்பந்தப்பட்ட வேலை செய்வோர் சுயதொழில் புரிவோர் A. A. T. (London) Inter வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர். Jaffna Institute of Industrial Management 18/1 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. C 2939

### விற்பனைக்கு

பிளாஸ்ரிக் வெற்றுப்பரல்கள் (Empty Barrels) விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ், பிரதானவீதி, சுன்னாகம். (C 2956)

நல்ல நிலைமையிலுள்ள EY தொடரிலக்க மொரிஸ்மைனர் கார் விற்பனைக்குண்டு. மு. பரராஜசிங்கம், சட்டத்தரணி. 76 A, கண்டிவீதி. (கச்சேரி அருகாமை), யாழ்ப்பாணம். Telephone 24091. [C 2958]

10 அடி அகலம் 8 அடி உயரமுள்ள பாவித்த நல்ல நிலையில் உள்ள கண்ணாடி அலுமாரிகள் இரண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு! S துரைராசசிங்கம், கலாசாலைவீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். (C 2980)

கொண்டா C-90 மோட்டார் சயிக்கிள் 86சிறீ தொடர் இலக்கம் விற்பனைக்குண்டு. ஜெனரல் மோட்டோர்ஸ், இராமநாதன்ரோட், திருநெல்வேலி. (C 2998)

A/L மாணவர்களுக்கான ''கணக்கியல் கோட்பாடுகள்'' (Accounting Theory) வெளிவந்துவிட்டது. சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். [C 2988]

அல்சேஷன் நாய்க்குட்டிகள் அழகான தனி ரகம் மூன்று கிழமைகள். பழைய நம்பர் 181, கோவில் வீதி, நல்லூர் (C 2985)

என்ஜினியர் ஒருவரின் வீட்டுத் தளபாடங்கள் Pioneer Amp. செற், தேக்கு அலுமாரிகள், Vono Spring Double Beds, கட்டில்கள், கண்ணாடி மேசைகள், கிளாஸ் வகைகள், Dinner Sets, Pyrex, Typewriter, புத்தக அலுமாரி, குசினி கபேட் மேசைகள், கம்பளிகள் மற்றும் பல உடன் விற்பனைக்கு. New No: 262, பிரதான வீதி, [Dr. தருமலிங்கம் டிஸ்பன்சறி அருகாமையில்], யாழ்ப்பாணம். C 2979

## 5-வது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சி. இராசா**

(தெல்லிப்பழை)

எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஐந்தாண்டுகள் ஆகின்றன நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு என்றும் நீங்காது.

அன்பு மனைவி,
பிள்ளைகள், பேரர்.

(A 854)

## வாகன சேவிஸ் வாடிக்கையாளர்களிற்கு ஓர் நற்செய்தி

நவீனமயமாக்கப்பட்டதும் தொழில் நுட்ப அறிவுடன் கூடிய பல வருட அனுபவம் வாய்ந்த சேவிஸ் வல்லுனர்களினால் உங்களினது வாகனங்களை நியாய விலையில் பூரண திருப்தியுடன் சேவிஸ் செய்வதற்கு உடனே விரையுங்கள் நியூ லங்கா சேவிஸ் நிலையம்.

நன்றி.

**நியூலங்கா சேவிஸ் நிலையம்,**
K. K. S வீதி,
மருதனார்மடம்,
சுன்னாகம்.

(C -2996)

## பயிற்சி

பாதுகாப்பான சூழலில் மானிப்பாயில் கம்பியூட்டர் பயிற்சி (Computer Programming) வகுப்புக்கள் மிகவும் குறைந்த சலுகைக் கட்டணத்தில் ஆரம்பம்: 27-06-1986 O/L படித்த எவரும் சேரலாம். தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்படும். நேரில் வரவும். Unikco Computer Centre சுதுமலைச் சந்தி, 282, யாழ்ப்பாணம் ரோட், மானிப்பாய். C 2981

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம், B. A.**

(முன்னாள் ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி)

ஆண்டுத்திதி:
21-06-1986

அன்பு தன்னில் தாயே ஆகவும் பண்பு தன்னில் தெய்வமே ஆகவும் இல்லக விளக்காய் துறவறச் சுடராய் விளங்கிய சிவபாக்கிய மெனும் மேலோய், யாழ். இந்து வெனும் மகளிர் கல்லூரியில் பல்லாண்டாகப் பண்பாசிரியையாய் அரும்பணி புரிந்தபெருங் குணக்குன்றே எமக்கும் மற்றோர்க்கும் கல்விச் சுடராய் உதவிகள் புரிந்த உத்தம குணத்தோய் ஆண்டு எத்தனை ஆயினும் நெஞ்சில் அரிய நினைவு நிலைத்திடும் அன்றோ!

-அன்பு உள்ளங்கள்.

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

(C 2994)

## கல்விக் கண்காட்சி

[உடுவில்]

இணுவில் அமெரிக்க மிசன் த. க. பாடசாலை கல்விக் கண்காட்சி இம்மாதம் 25 ம் திகதி நடைபெற உள்ளது.

யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. வே. தங்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## இடமாற்றம்

[சாவகச்சேரி]

பரந்தன் பகுதிகளில் நெல் குற்றும் ஆலைகளை நடாத்தும் உரிமையாளர்கள், தமது ஆலை உபகரணங்களை சாவகச்சேரிப் பகுதிக்கு மாற்றம் செய்கின்றனர்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**தம்பையா சதாசிவம்**

(தங்கராசா)

அன்னையின் மடியில்:
14-08-1916

ஆண்டவன் அடியில்:
21-05-1986

எம்மை வாழவைத்து மறைந்த தெய்வத்தின் அந்திமக் கிரியைகளில் கலந்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பியும் எமது துயரில் பங்கு கொண்டோர் அனைவர்க்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஐயாவின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

மனைவி (செல்வமணி),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

41 A, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

[C-2995]

## QUANTITY SURVEYING

86/87

(CITY AND GUILDS - LONDON)
PART - I and II

வகுப்புகள் 05-07-86 அன்று ஆரம்பமாகவுள்ளன.

உயர்கலைக்கல்லூரி.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-2945)




பிரகாசமான சலவைக்கு

நுரைவளம் கூடிய

## 'சுப்ப மில்க்வைற் சோப்'

வாங்கி உபயோகியுங்கள்

புதிய விலை ரூபா 4-50 சதம் மட்டுமே.

2 மேலுறைகளை அனுப்பி அழகிய திருவள்ளுவர் ஸ்ரிக்கர் ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்**

த. பெ. எண்: 77, யாழ்ப்பாணம்.

[A-747]

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி**

அன்னை மடியில்:
5-01-1928

இறைவனடியில்:
2-07-1985

திதி: 21-06-1986

எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் உங்கள்
பிரிவால் வாடும்:

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், மைத்துனர்,
பேரப்பிள்ளைகள்,
தாய், சகோதரிகள்.

பழைய விதானையார் வீடு,
துன்னாலை வடக்கு,
துன்னாலை.

(C-2989)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் வ. முருகு**

தோற்றம்: 02-06-1903
மறைவு: 22-05-1986
திதி: 21-06-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து அன்புடனும், பாசமுடனும் வளர்த்து அயராது உழைத்து எங்களை வாழவைத்த அன்பின் தெய்வமே! ஐயா, உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்புள்ள மனைவி செல்லம்மா, பிள்ளைகள் செல்லத்துரை, பொன்னுத்துரை (ஆசிரியர்), கண்மணி, கந்தசாமி, வடிவேல் இராசதுரை (பிரான்ஸ்), மருமக்கள் குலசேகரம், சந்திரா, லோகேஸ்வரி, இராணி.

கந்தரோடை வீதி,
சுன்னாகம். (C 3000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணு ஆயுதக் குறைப்பு:

# சோவியத்தின் யோசனையை அமெரிக்கா வரவேற்கிறது

வாஷிங்டன், ஜூன்-20

**"சோவியத் யூனியன் அணு ஆயுதங்களைக் குறைக்க உண்மையாகவே முயற்சியெடுத்து வருகிறதென்பதை அந்நாட்டின் புதிய ஆயுதப் பரிகரண பிரேரணைகள் விளக்குகின்றன" என்று அமெரிக்க அதிபர் திரு. றீகன் தெரிவித்துள்ளார்.**

அணு ஆயுதங்களைக் குறைக்க சோவியத் தலைவர் இப்போது தெரிவித்த யோசனை வரவேற்கத்தக்கது என்றும் திரு. றீகன் கூறினார்.

தங்களது உச்சிநிலைக் கூட்டத்திற்கு ஆயத்தம் செய்ய இரு தரப்பு உயர அதிகாரிகளும் சந்திக்கலாமென்று திரு. மிகையில் கொர்பச்சேவிடம் தான் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

ஆயுதக் குறைப்பு விஷயத்தில் இரு நாடுகளுமே உண்மையான முன்னேற்றத்தை விரும்பினால் பாதுகாப்பான, சமாதானமான உலகத்திற்காக உழைக்கமுடியும் என்றும் திரு. றீகன் தெரிவித்தார்.

1972ம் ஆண்டு ஏவுகணைத் தடுப்பு உடன்படிக்கையைக் குறைந்தது பதினைந்து ஆண்டுகளுக்காவது இரு நாடுகளும் கடைப்பிடிக்க வேண்டுமென்பது சோவியத் யூனியனின் இப்போதைய யோசனையாகும். [து]

# "தஞ்சமடைந்துள்ள தமிழரை இலங்கைஅனுப்பவேண்டாம்"

## சுவிஸில் கோரிக்கை

(ஜெனிவா)

''சுவிஸ் நாட்டிலும் ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழ் அகதிகளை தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்கு திருபபி அனுப்பவேண்டாம்''.

ஜெனிவாவில் சுமார் 300 தமிழர்கள் ஊர்வலமாகச் சென்று ஐ நா. சபையின் அகதிகளுக்கான ஆணையாளர் திரு. ஷோன் பியர் ஹொக்கேயிடம் கையளித்த மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜெனிவா ரயில் நிலையத்தின் முன்பாக கடந்த மாதம் 25ம் திகதி மாலை தமிழர்களின் ஊர்வலம் ஆரம்பமாகி ஐ. நா ஸ்தாபன காரியாலயம் வரை சென்று அங்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில்: ''சுவிஸ் அரசு தனதுநாட்டில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழ் அகதிகள் மீது தொடர்ந்தும் கடுமையான சட்டதிட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்துமாயின் இச் செயற்பாடுகள் ஏனைய ஐரோப்பிய நாடுகள் தத்தமது நாடுகளிலுள்ள அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு ஓர் அறிகுறியாகவும் சாதகமாகவும் அமையும் எனவும் கூறப்பட்டிருந்தது

இலங்கைத் தமிழ் அகதிகளை தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்குத் திருப்பியனுப்பும்பட்சத்தில் அவர்களது உயிருக்கு ஆபத்து ஏற்படுமெனவும் எனவே ஐக்கிய நாடுகள் சபையானது அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பவேண்டாமென சுவிஸ் அரசை வலியுறுத்தவேண்டுமெனவும் கேட்கப்பட்டிருந்தது.

இவ்வூர்வலத்தில் பேர்ண், லௌசான், பாசெல் போன்ற மாவட்டங்களிலுமிருந்தும மற்றும் பல மாவட்டங்களிலிருந்தும் சுமார் 300 தமிழர்களும் பெரும்பாலான சுவிஸ் மக்களும் கலந்துகொண்டனர் ஊர்வலத்தின் இறுதியில் பொதுச்கூட்டம் ஒன்றும்நடைபெற்றது.

இவ்வூர்வலத்தை தமிழீழ விடுதலை இயக்கங்களான தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப்புரட்சி அமைப்பு ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தன. (பி)



விமானக் குண்டு வீச்சுப் பற்றிய 'ஆனந்தவிகடன்' கேலிச் சித்திரம் இது. — நன்றி

# ஐ. நாணய சங்க கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாணய சங்கங்களின் தலைவர்கள் செயலாளர்களுக்கான கருத்தரங்கொன்று 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கை யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் மங்களவிளக்கேற்றி தொடக்கி வைப்பார்.

யாழ். சிரேஷ்ட கூ. உதவி ஆணையாளர் திரு. க. சண்முகலிங் ம் கருத்தரங்கை ஆரம்பித்துவைப்பார். சிறப்புவிருந்தினர்களாக யாழ். கூ. அ உ. ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, வீடமைப்பு மாவட்ட முகாமையாளர் திரு. பூ முருகையா ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். (வா)

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்குஉதவி

[சென்னை]

புதுக்கோட்டை மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்கு இருபத்தைந்து லட்ச ரூபா அளவிற்கு இதுவரை உதவி வழங்கப்பட்டுள்ளதென்றும், சலுகை விலையில் ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான அரிசி வழங்கப்பட்டிருப்பதாகவும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பழமலை தெரிவித்துள்ளார்.

மணல்மேல் குடியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில், இலங்கைத் தமிழ் அகதிகள் குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து எண்ணூறு அகதிகளுக்குப் பம்பாயைச் சேர்ந்த தொண்டர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஐம்பதினாயிரம் ரூபாவை திரு. பழமலை வழங்கும்போதே இதனைத் தெரிவித்தார். [து]


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி

★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

பிரான்ஸ், ஜெர்மனி, கனடா

செல்வதற்கு முற்பணம் செலுத்தியவர்கள் இம்மாதம் 25ந் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

[A 729]


2-வது டெஸ்ட்

# இந்தியா 235-8

[லண்டன்]

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையிலான 2வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி தற்போது 'லீட்ஸ்' மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடுகின்ற இந்தியக் கோஷ்டி முதல்நாள் ஆட்டம் முடிவடையும்போது 8விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 235 ஓட்டங்களைப் பெற்றது. வெங்ஸார்கர் ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களைப் பெற்றார். [வி]

## தடைகளை விதிக்க வேண்டுகோள்

[லண்டன்]

தென்னாபிரிக்கா மீது தத்தமது தடைகளை விதிக்குமாறு உலகத் தொழிற்சங்கங்களை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. ஒலிவெட் ஷாம்போ கேட்டுள்ளார்.

இதேவேளை தென்னாபிரிச்காவில் இன ஒதுக்கல் நீடிப்பதற்குப் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர் காரணமாக இருக்கிறார் என்று தொழிற்கட்சித் தலைவர் திரு. மீல்சின்னத் குற்றம் சாட்டியுள்ளார். [து]

இரு வாரங்களின் பின்

# வடமராட்சிப் பகுதியில் தபால் விநியோகம்

[புலோலி]

சுமார் இருவாரங்களாக கொழும்பிலிருந்து வந்து யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் தேங்கிக்கிடந்த வடமராட்சிப் பகுதி தபால் நிலையங்களுக்கான தபால் பொதிகள் பருத்தித்துறை தபாலதிபரின் பெருமுயற்சியினாலும் அஞ்சலகத்திற்கு அருகாமையிலுள்ள பொதுசேவை நிறுவனங்களின் ஒத்துழைப்பினாலும் கடந்த செவ்வாய்க்கிழமை பஸ்வண்டியில் கொண்டுவரப்பட்டு மறுநாள் தபால் விநியோகம் இடம் பெற்றது.

அண்மையில் ஏற்பட்ட டீசல் தட்டுப்பாட்டினால் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறைசாலை பஸ்சேவைகளை நிறுத்தியுள்ளது. இதனால் கொழும்பிலிருந்து வந்த தபால் பொதிகள் யாவும் இரண்டு வாரங்களாக வடமராட்சிப் பகுதிக்குவந்து சேரவில்லை அதேபோல் வடமராட்சிப் பகுதியில் உள்ள தபால் நிலையங்களில் யாழ்ப்பாணம் தபால் நிலையத்திற்

(5ம் பக்கம் பார்க்க)

# குருநகர் மீனவர் நிவாரண நிதி

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவுக்கடலில் கொலையுண்ட குருநகர் மீனவர் குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக இதுவரை 41,600 ரூபாய் பொதுமக்களிடமிருந்து கிடைத்திருப்பதாக மேற்படி நிவாரண நிதிக்குப் பொறுப்பாகவிருக்கும் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

நிவாரண உதவி வழங்க விரும்பும் பொதுமக்கள், செயலாளர் கடற்றொழில் அபிவிதித்திச்சங்கம், குருநகர் என்ற முகவரிக்கோ அல்லது நேரடியாகவோ வழங்கும்படி சங்கம் கோரியுள்ளது.

சங்கத்திடம் நிதி வழங்கியுள்ளவர்களின் விபரம் வருமாறு:

திரு. கி. சிலுவைதாசன் ஜ. பி மத்திய கிழக்கு வீதி குருநகர் 10,000/-; ஹோட்டல் சுபாஸ் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் 1,000/-; திருமதி ஜே என் ஜோண் 669 பீச்றோட் குருநகர் 28,000/- டாக்டர் ஏ எல். ஏபிரகாம் பீச்றோட் குருநகர் 2,000/- திரு. எம். கே. மரியதாசன் பீச்றோட் குருநகர் 500/- திருமதி ஆர். எப். எபிரகாம், பீச்றோட், குருநகர் 100/-, மொத்தம் 41,600/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

"இமயமலையில் கடவுளைக் காணலாமென்றால் அங்கு நான் உடனடியாகப் புறப்படுவேன் ஆனால் மனித சமூகத்திலேயே கடவுள் வீற்றிருக்கிறார் என்பது எனது திடமான நம்பிக்கை."

— மகாத்மா காந்தி

## நமது நோக்கு

### விளக்குமாற்றுப் புரட்சி

'என்னடி! ஆத்திரமறியாச் சின்னப்பொட்டை, அவனுக்கு அந்த விளக்குமாற்றாலே இரண்டுபோட்டாதேன்டி' என்றொருநாடோடி வாசகம் உண்டு.

செருப்பும், விளக்குமாறும் சீர்கெட்டவையை உபசரிக்கும் கருவிகளென்பது ஒரு பண்டைக் கால மரபு.

"ஒரு பழுத்த கிழவி கொஞ்சக் கூழுக்கு வந்திருக்கிறாள் என்ற சங்கதியை புருஷன் தன் மனைவியின் காதிற்போட, "உனக்குத் தொலைக்கிறதுமல்லாமல் ஊருக்குந் தொலைக்கவா" என்று சொல்லி விளக்குமாறு கொண்டு வெண்சாமரை வீசி சுளகு எடுத்து ஆலவட்டம் பரிமாறி அவளை வீட்டுக்கும் தெருவுக்குமாகத் துரத்தியடித்தாளாம். கூழுக்கு வந்த கிழவி ஔவைமுதாட்டியென அறிக.

வீட்டையும், சூழலையும் சுத்தி செய்யும் விளக்குமாறு, மனித இகழ்ச்சியை வெளிப்படுத்தும் கருவியுமாகும்.

தீமையை ஒழித்து தூய்மையைப் பரப்பும்சாதனமானதால் அதுஒருபுரட்சிக் கருவியாகக் கருதுவது பொருத்தம்.

இக்கருத்தை இன்று யார் கண்டு பிடித்திருக்கிறார்கள்? பிலிப்பைன்ஸில் நடைபெறும் புரட்சி ஆட்சி தனது இவ்வருட சுதந்திரக்கொண்டாட்டத்தில் இராணுவ அணிவகுப்புக்கு இடமளிக்கவில்லை மத்திய மணிலா பூங்காவில் நடைபெற்ற நகரசுத்தியாளரின் விளக்குமாறு அணிவகுப்பு வெகு விமரிசையாக நடந்ததைப் படங்களும் செய்திகளும் பிரபலமாகக் குறிப்பிடுகின்றன.

பிலிப்பைன்ஸில் நாட்டிலும், றேட்டிலும், அரசாட்சியிலும் மக்கள் வாழ்விலும் தேங்கியிருந்த அழுக்கு ஜனாதிபதி மார்க்கோஸ் நாடு கடத்தப்பட்டதுடன் நீங்கவில்லை. ஆனால் துப்பாக்கியில் எழுந்த மக்கள் புரட்சி இன்று அதன் முழுப்பயன் பெறுவதற்கு விளக்குமாறை நாடி நிற்கிறது.

சிக்கனத்தை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தும் இன்றைய ஆட்சித் தலைவி திருமதி அக்குவினோ தாமே அதற்குமுதல் உதாரணமாக விளங்குகிறார். அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பது பிலிப்பைன்ஸ் - அன்றும் இன்றும் என்ற வேறுபட்ட முறையில் உலகுக்கு எடுத்துரைக்கிறது

பலகோடி டொலரைப் பதுக்கி படாடோபமாக வாழ்ந்த முன்னைநாள் ஜனாதிபதி மார்க்கோஸின் மோசடி ஆட்சிக்குத் தன்னுலியன்ற அளவுக்கு அமெரிக்கா மீண்டு கொடுத்ததை யார் மறப்பார்? ஆற்றுக் கட்டத்தில் அவரைக் கைவிடுவதே அத்தேசத்தின் நட்பைத் தொடரும் வழி என்ற ஞானம் அமெரிக்க ஆட்சிக்கு உதயமானது.

அமெரிக்காவைக் கண்ணஞ் செய்வதோ, பிலிப்பைன்ஸ் ஆட்சி விவகாரங்களின் குறை நிறைகளை சீர்தூக்குவதோ எமது நோக்கமல்ல மூன்றும் உலக நாடுகள், பிச்சைக்கார நாடுகள் - நாம் என்று கடன் உதவிக்கு கையேந்தி காலாகாலமாய் பல்லை இழிக்கும் நாடுகள் பல அபிவிருத்தி என்ற சாட்டில் கடன் எடுக்கும் நிதி எவ்வாறு விரயமாவதை இன்று இலங்கையில் நடைபெறும் போர் விளக்குகின்றது.

மகாவலித் திட்டம் இதுகாறும் இடமளித்த ஆடம்பர வாழ்வுக்கு. இன்று "நாட்டைப் பாதுகாக்கும் பெரும்பணிக்கு" செலவிடும் நிதி எங்செங்கேயெல்லாம் ஊற்றெடுத்துப் பாயும் மோசடி போன்றதைப் பிலிப்பைன்ஸ் புதிய ஆட்சி கட்டுப்படுத்தி, காலகதியில் ஒழித்துவிட முயல்கிறது.

அந்த நாட்டின் இந்தப் பெருமுயற்சியின் முடிவு என்னவானாலும், எங்கள் நாட்டுக்கு அவசியமானதும் விளக்குமாற்றுப் புரட்சி என்பதையே நாம் வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

நாட்டில் மக்கள் உயிருடன் எரிக்கப்படுவது ஒருபுறம்: ரூபவாஹினியில் தில்லை நடராஜருக்கு நாட்டிய அஞ்சலி செலுத்தும் பெண்களின் அலங்காரம் மறுபுறம். அமைச்சர்கள், அரச பிரமுகர்கள் பவனி வரும் மோட்டார் ரதங்களின் பளபளப்பு இருந்தவாறென்னே!

பொதுமக்கள் எந்தஇனத்தவரென்றாலும் - பிச்சை எடுத்தும் ஜீவனம் நடத்த முடியாத இன்றைய நிலையில், நாடு நாளுக்குநாள் வீழ்ச்சியடைய கிராம எழுச்சிபற்றிய பிரசாரம் துன்ப நாடகத்தின் மத்தியில் இடம்பெறும் கோமாளிக் கூத்தல்லவா?

எட்டுத் திக்கும் சென்று நல்லெண்ணமும் நிதியுதவியும் தேடுவதில் அரசு வெற்றி கண்டாலும் உள்வீட்டு அழுக்கை அகற்றுவது பகீர்தப் பிரயத்தனத்தாலும் முடியாத காரியம்.

மக்களின் துன்பத்தைத் திசை திருப்ப, தமிழர் பிரச்னை - தமிழர் பயங்கரவாதம் - மார்க்சிய புரட்சிவாதம், என்ற புருடாக்கள் சிலகாலம் உதவிபபோதும் இன்றைய காரிருள் உதயம் தூரத்தில் இல்லையென்பதைக் குறிக்கிறது.

விளக்குமாறு எடுத்து நாட்டையும் நம்மையும் சுத்தப்படுத்தும் புரட்சியே அமைதிக்கு வழிகாட்டும்.

### மீன்விலை அதிகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிச் சந்தையிலும் மீனின் விலை பெருமளவு அதிகரித்துள்ளது.

மிகவும் நல்ல இனமீன்கள் கிலோ ஐம்பது தொடக்கம் அறுபது வரைச்சும் விற்கப்படுகிறது.

'யார் போய்ச் சொல்லுவார்? இந்த ஏழை வருந்தும் வேளை...'

# வலை வீசி வளம்சேர்த்தோர்

# அலைபாயும் துயரம்!

"நீலத்திரை கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி எல்லை வடமாலவன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு" என்று தமிழகத்தின் கடல்நிலத்துக்கு இலக்கிய அந்தஸ்து வழங்கினான் பாரதி.

"ஓ கிரேக்கத் தீவுகளே நந்தையும் அம்மையும் ஓடியாடிய கிரேக்கத்தின் கடற்கரைகளே" எனப் பைரன்பாடிய அந்த நினைவுகள் தான் எம் நாட்டு மக்கள் கடல்வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்டதை நினைத்தபோது எண்ணத்தில் இழையோடியது.

நிலங்களை ஐந்தாக வகுத்து கடலும் கடலசார்ந்த நிலமும் 'நெய்தல்' நிலம் என வகைப்படுத்தியவன தமிழன். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடல்' அவன் வகுத்த நெறி.

இலங்கையிலே வடக்கில் மாத்திரம் மீன் பிடித்து இலங்கையின் சுய தேவையில் இருபத்தைந்து வீதத்தை அவனே பூர்த்தி செய்தான்.

தேடுகிறாய்?" என்று கேட்டுவைத்தேன். "அண்ணை நாங்கள் "ஷெல்" தேடுகிறோம் மார்க்கெட்டில் நல்ல விலை" சிறுவன் பதில் இறுத்தான்

வீடுகளை இடித்தவர்கள் எமக்குத் தந்த பரிசு 'ஷெல்' பொம்மரனில் அதுஒரு வியாபாரம். யாழ்ப்பாணத்திலும் அது இன்று வியாபாரம். இவ்வாறு சிந்தித்துக்கொண்டே கடற்கரையை நோக்கி நடக்கின்றேன்! ஆதிகோவிலடியில் தரைமட்டமாகிக் கிடக்கும் வீடுகளை பார்க்கையில் மனமே ஏங்கிப்போய் விடுகிறது!

ஆதிக்கோவிலடியில் இருந்த 60% மான வீடுகள் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளன. சம்மாட்டியார் சண்முகவடிவேல் அருமைத்துரை, பூபாலு இராமலிங்கம் என்போருக்கு சொந்தமான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு விட்டன.

எம்முடன் பேசுவதற்கு யாராவது முன்வருவார்களா என ஏங்கினேன். ஒருவருடன் எனது நிலையை விளக்கினேன்.

"உங்களுக்குப்பேட்டி தரும் போது பொம்பர் வந்தால் என்னசெய்வது எனச்சொல்லி விலகிக் கொண்டார்.

அப்பால் கடற்கரைப் பக்கமாக நகர்ந்தேன். அதிக

அத்துறைமுகத்தில் உள்ள மீனவர் காவல் அரண் ஒன்றுக்குள் நான் நுழைந்தேன்.

எனது நோக்கத்தை அவர்களுக்குச் சொன்னேன். அங்கே என்னை அகமும் முகமும் மலர வரவேற்றார்கள்! அங்கு செல்லச்சாமி கிருஷ்ணசாமி என்ற வலிபர் வல்வைமக்கள் சார்பாக எனக்குப் பேட்டி தந்தார். "பொம்பர்வந்தாலும்" என்று பக்கத்தே பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டிருந்தன நீங்கள் ஒன்றுக்குமே பயப்படாதீர்கள பக்கத்தே பதுங்குகுழிகள் இருக்கவே இருக்கின்றது என செல்லிச் சிரித்தார்.

கே: இந்தக் கடற்கரையில் இருப்பவர்கள் எல்லாம மீனவர்களா?

ப: தம்பி... பொம்பர் தாக்கியதில் வல்வைச் சந்தியில் இருந்த சலூன்கள் எல்லாம் சிதறுண்டு போயின. அந்தக்குடும்பங்களும் இந்தக் கடற்கரையில் தான் அகதிகளாக இருக்கின்றன.

கே: இங்கு கடல்வலயச்சட்டத்தால் பாதிப்புக்கு உள்ளான குடும்பங்கள் எத்தனை?

ப: சுமார் ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தொழிலில் இறங்கியிருந்த சுமார் 60 வள்ளங்களும், 40 சிறுவள்ளங்களும கடற்கரைக்கு அப்பால் நகரமுடியாத நிலையில் இருக்கின்றன.

கே: அப்படியென்றால் சீவியத்துக்கு வழி என்ன?

ப: இரவு 4.30 மணிக்கு எழும்புவோம். நேவி கடலில் செல்கிறதா என நோட்டம் விடுவோம்' அப்புறம் கடலில் கரையில் நின்று மீன்பிடிப்போம். அந்த அளவில்உழைத்துத்தான் எங்கள் உயிரை உடலில் வைத்திருக்கிறது. அரிசி கொத்து பத்து ரூபா, புளி கிலோ இருபத்தி ஒன்று நாங்கள் எப்படித்தான் வாழப் போகின்றோம்!

கே; அரசாங்கம் உங்களுக்கு நிவாரண முத்திரைகள் தருகின்றதாமே?

ப: தம்பி...எறும்பின் கண்ணுக்கு எலி மூத்திரம் ஏகப் பெருவெள்ளம்" என்ற கதைதான் இது ஐந்து அங்கத்தவர் கொண்ட குடும்பத்துக்கு மாதம் ஒன்றுக்கு நிவாரணம் ரூபா இருநூறு மாத்திரந்தான்! இந்தக் காசு ஒரு கிழமைக்குக் கூட எமக்குக் காணாது.

கே: வேறு என்ன பாதிப்புக்கள் உங்களுக்கு உண்டு?

★ தகர்ந்துபோன ஆதி கோவில்

★ வறுமைப் பிடியில் வல்வை மீனவர்

★ துயரின் விளிம்பில் பொலிகண்டி

★ ஸ்தம்பித்த நிலையில் இன்பருட்டி

★ அழிந்துபோன சுப்பர்மடம்

ஆனால் அரசு இயற்றிய கடல்வலயச் சட்டத்தால், அவன் ஆடி ஓடிய கடற்கரைகள் அவனுக்கு அன்னியமாகி விட்டன.

நான் பேட்டிக்காகச் சென்ற இடங்களில் எல்லாம் சிரித்த முகங்களைக் காணவில்லை. இலட்சக்கணக்கான பெறுமதிகளைக் கொண்ட வீடுகளைப் பறிகொடுத்துக் கூட்டம் கூட்டமாக எம்மவர் அகதியாகச் சென்றதையே கண்டேன்.

ளாக நம்மவர்கள் சிறு வளங்களில் எங்கேயோ போய்க் கொண்டிருந்தார்கள். அகப்பட்டவைகள் அவர்கள் கையில் இருந்தன. வீடுகள் பூட்டப்பட்டிருந்தன; ஓடுகள் வான் தாக்குதலால் உடைக்கப்பட்டிருந்தன. மதில் இருக்கும்; வீடுகள் தரைமட்டமாயிருக்கும். இப்படி நான்கண்ட காட்சிகள் கண்கலங்க வைத்தன.

500 மீனவக் குடும்பங்கள் இருந்தஇடத்தில் மனிதர்களே இல்லை. பெருந் தொகையானோர் நவிண்டில் தாமோதர வித்தியாசாலைக்கு அகதிகளாகச் சென்று இருக்கிறார்கள்.

### அழிந்துபோன ஆதிகோவில்: அவலநிலையில் மீன்பிடிமக்கள்

வல்வெட்டித்துறைக்கு மேற்கே அதிக குடிசனத்தொகையைக் கொண்ட இடம் ஆதிகோவிலடி. 2-ம் உலக யுத்தத்தின்பின்பு பிரிட்டிஷ் நகரங்கள் இடிந்து கிடப்பதைப் போன்று இடிந்து கிடக்கின்றன. இங்கு மீனவ மக்கள் கடல்வலயச் சட்டத்தால் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என அறிவதற்குக் கற்குவியல்கள் மேலால் நடந்து சென்றேன். ஹிட்லரின் தாக்குதலால் இடிந்துபோன வீடுகளின்கீழ் பிரிட்டிஷ் மக்கள் தேடுதல் நடத்தியபோது முதலில் அகப்பட்டது "ஜேர்மன் கலாச்சாரத்தின் வரலாறு" என்ற நூலே. அதுபோன்று இந்தச் [illegible] கிடைக்கப்போகிறது என்ற எண்ணத்தில் 'தம்பி என்ன

களஆய்வு

திக்கவயல்
சி. தர்மகுலசிங்கம்

### வறுமைக் கோட்டில் வல்வைமீனவர்

ஆதிகோவிலடியில் நான் உதயசூரின் கடற்கரைக்கு அருகிலுள்ள காட்டுவளவுக் கடற்கரைக்கு நகர்ந்து சென்றேன்.

இந்தக் கடற்துறைமுகமே பிரபல்யமான வல்வெட்டித் துறைமுகம் எப் பிரபல்யம் பெற்று இருந்தது.

இத்துறைமுகமே யாழ் மக்களுக்கு முன்பர்மாவில்இருந்து அரிசியை இறக்குமதி செய்து கொடுத்தது.

இங்கிருந்தே அமெரிக்காவுக்குத் தமிழ் மாலுமிகள் கப்பல் ஓட்டினார்கள்.

ப: நாம் வள்ளங்களைக் கடனாக வாங்கினோம். வங்கிக்குச் செலுத்தவேண்டிய மாதக் கடனைக் கட்டச்சொல்லி நெருக்குகின்றார்கள். கடலுக்கு நாம் போக முடியாது. வீட்டிலே நிம்மதியாக வாழ முடியாது. இந் நிலையில் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததபோல அரசாங்கம் நடக்க முனைகின்றது.

கே: உங்களுக்கு எவ்விதத்தில் நாம் உதவி செய்யலாம்?

ப: எங்களுக்கு உதவிசெய்ய வேண்டாம் ஆனால் அகதிகளான ஆதிகோவிலடி மக்கள் ஏற்கனவே இராணுவத்தால்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக முன்னேற்றத்திற்கு பொருட்காட்சியின் அவசியம்

[உடுவி ]

''கல்லிலே கலைவண்ணம் கண்டவன் தமிழன். ஆரம்பப் பாடசாலைகளில் கலை, கலாசாரம், பண்பாடுகள் நல்ல முறையில் அமைந்தால்தான் சீரிய சமூகத்தை உருவாக்க முடியும். நாம் மறந்துபோன பல கலைகளையும், பழக்கங்களையும் கல்விப் பொருட்காட்சிகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளீர்கள் இத்தகைய ஆற்றல்களும் செயற்பாடுகளும் எல்லாப் பாடசாலைகளிலும் உருவாகவேண்டும்''.

இவ்வாறு கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலைக் கல்விப் பொருட்காட்சியை ஆரம்பித்துப் பார்வையிட்டபின் யாழ்ப்பாணம் கல்விப் டணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இக்கல்விப் பொருட்காட்சியில் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன், விஞ்ஞான பாடக் கல்வி அதிகாரி திரு. எஸ். நடராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வித்தியாலய அதிபர் திரு. அ. தற்பரானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. தனஞ்செயன், ''இது போன்ற பொருட்காட்சிகள் மூலம் மாணவர்களின் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் வெளிக்கொணர முடியும்' என இங்கு குறிப்பிட்டார்.

'நடைமுறைக் கல்வியில் நாம் காதால் கேட்டும், பார்த்தும் கற்றவற்றைச் செயல்மூலம் செய்து கற்கும் கல்விக்கு, பொருட்காட்சிகள் பயனுடையவையாக விளக்குமென, விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு எஸ் நடராசா தமதுரையில் குறிப்பிட்டார்.

## புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்

(புலோலி)

தென் புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிய பூங்காவனக்கட்டிடம் அமைத்தல், மணிக்கூட்டு கோபுரத்திற்கு வர்ணம் பூசுதல் என்பன சுமார் 1,75,000 ரூபா செலவில் நடைபெற்று வருகின்றன. அத்துடன் வெளி மண்டபத் திருத்த வேலைகளும் முருகையன் வாசல் மண்டபம் அமைக்கும் வேலைகளும் நடைபெறவுள்ளதாகவும் ஆலய பிரதம குருக்கள் தெரிவித்தார்.

புற்றளைச்சித்தி விநாயகராலய வருடாந்த மகோற்சவம் கடந்த 12ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. நேற்று 20ம் திகதி தேர்த்திருவிழா நடைபெற்றது. இன்று தீர்த்தத் திருவிழாவும், நாளை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட

## வலை பந்தாட்ட போட்டி

[உடுவில்]

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான வலைபந்தாட்டப் போட்டிகள் இம்மாதம் 23ம். 24ம் திகதிகளில் உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.


மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் யாழ் மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு வி. தங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இம்மாதம் 23—26ம் திகதிகளில் பாடசாலைகளுக் கிடையே நடைபெறவுள்ளன.

வடமராட்சிப்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

குக் கொண்டு செல்லப்பட்டு அனுப்பபப்பட வேண்டிய தபால் பொதிகளும் அங்கேயே தேங்கிக்கிடந்தன. வடபிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறைச்சாலை அத்தியட்சகர், பஸ் வண்டி ஒன்றில் தபால் கந்தோர்களில் உள்ள தபால் பொதிகளை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கும் யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் உள்ள தபால் பொதிகளை எடுத்து வருவதற்கும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்திருந்தார்.



## தொண்டு புரிந்த கணக்காளர்

(யாழ்ப்பாணம்)

'காலையும் மாலையும் கடவுளை வணங்கு' என்ற இலக்கணத்துக்கு இலக்கியமாக அமைந்தவர் உரும்பிராய் திரு. மு. பசுபதி அவர்கள் இயற்கை சிறிதலும் கருணாகரப் பிள்ளையாரைத் தினசரி வணங்கும் இயற்கையில் தவறாதவர் அவர். கருணாகரப் பிள்ளையார் கோயில் திருபணிச் சபையின் தனாதிகாரியாக இருந்து கௌரவமான முறையிற் பெருங்கொண்டு புரிந்த கணக்காளர் திரு. மு. பசுபதி அவர்கள் கருணாகரனின் அடித் தொண்டனாவர்.''

பிரபல சமய சமூக ஊழியரும் சுங்கத் திணைக்களத்தின் பிரதம கணக்காளருமான திரு மு. பசுபதியின் மரணங் குறித்து உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் திருப்பணிச்சபையின் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

''அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தின் பிரதம ஆலோசகராகப் பணியாற்றிய திரு. பசுபதி இலங்கை வித்தியா பகுதியில் கணக்காளராகவும், சுங்கத் திணைக்களத்தின் பிரதம கணக்காளராகவும் உத்தமமான சேவை செய்து ''நேர்மையான நல்ல மனிதர் பசுபதி'' என்ற சிறப்புக்கும் உரியவரானார். சைவ, தமிழ் அபிவிருத்திக்கு அல்லும் பகலும் அயராது உழைத்த மெய்யன்பர் திரு. மு. பசுபதியின் திடீர் மறைவு சைவ, தமிழ்ச் சமுதாயத்திற்கு ஈடு செய்ய முடியாத பெருநட்டமாகும்.'' என்று மேலும் தெரிவித்துள்ளார்.

ஈச்சமோட்டையில்

## அலங்கார உற்சவம்

[யாழ்ப்பாணம்]

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஸ்ரீஞானவைரவர்ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளைஆரம்பமாகி அடுத்த மாதம் 3-ம் திகதி முடிவடைகின்றது.

அபிஷேகமும் அன்னதானமும், பஞ்சமுகார்ச்சனையும் எதிர்வரும் 4-ம் திகதி நடைபெறும்.

## கிடங்கு மூடப்படாமல் பாதசாரிகள் கஷ்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில நீர் குழாய்கள் பொருத்துவதற்காக வெட்டப்பட்ட கிடங்கு மூடப்படாமையால் பாதசாரிகளும் வாகனங்களும் அடிக்கடி விபத்துக்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

பிரதானவீதியில் துறைமுகத்தில் இருந்து நீளமான இந்த நீர்குழாய் கிடங்கு வெட்டி பல மாதங்களாகியும் இதுவரை மூடப்படவில்லை, வீதியெங்கும் கற்கள் சிதறிக் கிடக்கின்றன

## வாகனம் கிடைத்தது

[வவனியா]

யாழ் நகரில் காட்சிப்பொருளாகக் காணப்பட்ட வவனியா பிரஜைகள் குழு உபதலைவர் ஜனாப் பி. எஸ். அப்துல்லாவின் மோட்டார் வாகனம் வவனியா கொண்டுவரப்பட்டுள்ளது.

மேற்படி வாகனம் வவனியாவில் அவரது இல்லத்தில் வைத்து சில மாதங்களுக்கு முன் இனந்தெரியாத சிலாரல் கடத்தப்பட்டது.

## 6 பேர்விடுதலை

[வவனியா]

பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தின்கீழ் வன்னி ஆயுதப்படைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் 6 பேர் விடுவிக்கப்பட்டனர்.

ஞானசேகரம், பிரேமரத்ன, சுரேந்திரன், எம். மக. ஆர். நிஸார், பாக்கியநாதன் ஆகியவர்களுடன் நெல்லியடியைச் சேர்ந்த ப. கமலநாதன் எனபவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## இன்று நோன்மதி கருத்தரங்கு

(யாழ்பபாணம்)

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரால் வைமன்ரோட்டில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று காலை பத்துமணிக்கு பேராசிரியர் கே. சிவஞானசுந்தரம் [நந்தி] தலைமையில் நோன்மதிக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் ''நவீன நாடக அரங்கியல் வளர்ச்சி'' பற்றி கலாநிதி சி. மௌனகுரு உரையாற்றுவார்' [வா]

## இன்று நகை வழங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக்கிளை யாழ். பிரதான வீதி மக்கள் வங்கிக்கிளை ஆகியவற்றின் நகைகளை அடகு வைத்தோர் தங்கள் நகைகளை பலாலி இராணுவமுகாமில் நாளை பெற்றுக்கொள்ளலாம்.

21-ம் திகதி இன்று போயா தின விடுமுறையாதலால (முன்னர் வெளிவந்த செய்திகளின் படி) நகைகள் வழங்கப்படமாட்டாது. [வா]

## பஸ்விபத்து சிறுவன் பலி

[வவனியா]

யாழ்ப்பாணத்திலிருந்து கொழுப்பு சென்ற தனியார் பஸ் ஒன்று வவனியாவில் மூன்றுமுறிப்பில் 14 வயது சிறுவனொருவனை மோதியதால் அச்சிறுவன் மரணமானான்.

விஜேசிங்க என்ற சிறுவனின் மரணத்தையடுத்து மேற்படி பஸ்ஸின் சாரதி பஸ்சுடன் தடுத்து வைக்கப் [illegible]

# வலை வீசி வளம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எரிக்கப்பட்ட பொலிகண்டி வீடுகளில் வானமே கூரையாக, வையகமே பாரமாக இடம் பெயர்ந்திருக்கிறார்கள். அம்மக்களைத் தேடிச் சென்று உதவிபுரியும்படி ஈழநாட்டில் செய்தி வெளியிடுங்கள். அதுவே போதும்.

நன்றிகலந்த வணக்கத்துடன் அவ்விடம் விட்டு வெளியேறுகின்றேன்.

### மயான பூமியான ஊறணிக்கடற்கரை

வல்வெட்டித் துறையிலிருந்து கிழக்கே 1மைல் தூரத்தில் அமைந்திருக்கிறது. ஊறணிக் கடற்கரை அந்தக்கடற்கரைக்குச் செல்லும் வழியில் நூலகம் ஒன்று தரைமட்டமாகிக் கற்குவியலாகக் கிடக்கின்றது. இங்குதான் 'பொலிசண்டி, சமரபாகு ஆகிய இடங்களில் இருந்து அழைத்து வரப்பட்ட 70 வாலிபர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அதைக் கடந்து நான் ஊறணிக்கடைற்கரையில் அமைந்திருக்கும் மடத்துக்குச் சென்றேன். அங்கே ஒரேயொரு வாலிபர் மாத்திரம் படுத்திருந்தார். என்னைக்கண்டதும் சற்றே விழிகளை உயர்த்தித் தனது சந்தேகப்பார்வையை என் மீது படரவிட்டார்.

நான் ஈழநாட்டில் வேலை செய்கின்றேன். கடல்வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பேட்டி காணப் போகின்றேன் எனச் சொல்லி வைத்தேன். ''இருங்கள்'' எனச் சொல்லி விட்டு அந்த வாலிபர் நகர்ந்துவிட்டார்.

ஐந்து நிமிடம் கழிந்திருக்கும்! அந்த வாலிபர் இன்னும் சிலருடன் வந்தார். அங்கே நான் ஈழநாட்டில் இருந்து தான் வந்திருக்கின்றேனா என்பது பற்றிக் குறுக்குக் கேள்விகள் எழுந்தன.

ஒருவாறு விசாரணையில் இருந்து என்னை ''நானாக'' நிருபிக்க நான் பட்டபாடுகள் மிக அனந்தம்!

இந்த ஊறணிக் கடற்கரையில் இருந்து தெற்கே அமைந்திருப்பது ஊறணிக்குடியேற்றம். அனைத்து மக்களும் கடல் தொழிலையே நம்பி வாழ்ந்தவர்கள். சுமார் 250 குடும்பங்கள் முற்றாகவே தொழில் இழந்து இருக்கின்றன வறுமையில் உழலும் நிலைமைக்குத் தள்ளப்பட்டு உள்ளார்கள். பாதிக்குடிசனத்தொகை அகதிகளாக இந்தியா சென்றுவிட்டார்கள்.

ஆழ்கடலிற்குச்சென்று மீன்பிடிக்க முடியாமையால் சிறிது தூரம் சென்று ''சூடை'' பிடிக்கின்றார்கள. இவ்வாறு எல்லோருமே செய்வதால் மீனின் விலையை இறக்கச் செய்வதில். மீன் முதலாளிகள போட்டி போடுகின்றார்கள். எரியும் வீட்டில் பிடுங்கியது அறுதி!

### சோபை இழந்துபோன பொலிகண்டிக் கடற்கரை

பொலிகண்டியை நோக்கி எனது வாகனம் நகர்ந்து சென்றது.

பொலிகண்டி கடற்கரை காலையில் இருந்து மாலை வரை விழாக்கோலம் போல முன்பு காட்சியளிக்கும்.

அந்தச் சோபையினை இழந்து கடற்கரை தவிக்கின்றது. கட்டப்பட்டிருந்தபெரும்பாலான வள்ளங்கள் உள்ளூருக்குள் இழுத்து விடப்பட்டிருக்கின்றன. கடற்கரைக்குப் பக்கத்தே இருந்த 'நூலகம்' இராணுவ நடவடிக்கைகளால் தரைமட்ட மாக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக ஓடி விட்டார்கள்.

இராணுவத்தினரால் எரிக்கப்பட்ட வீடுகளில் வல்வெட்டித்துறையிலிருந்து அகதிகளானோர் தங்கியிருக்கின்றார்கள். மொத்தத்தில் இங்கு மூவாயிரம் பேருக்குமேல் தொழிலின்றிப் பரிதவிக்கின்றார்கள். நேரடியாக நான் அறிந்த உண்மை என்னை நெகிழவைத்தது.

### ஒளி இழந்துபோன இன்பருட்டிக் கடற்கரை

ஊறணிக் கடற்கரையிலிருந்து நேராக எனது வாகனம் இன்பருட்டிக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தது. அங்கே அதிர்ஷ்ட வசமாகப் பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தர்கள் சிலரைச் சந்திக்க நேர்ந்தது.

கடல்தொழில் எவ்வாறு பாதிக்ப்பட்டுள்ளது என்பதை அவர்கள் விளக்கினர்கள். எமது கடற்கரைக்கு முக்கால் மைல் தூரத்தில் தான் இராணுவ முகாம் இருக்கின்றது. நாம் சுதந்திரமாகக் கடற்கரையில் உலாவ முடியாது. எந்த நேரமும் எம்மீது ''ஷெல்'' விழும்!

நாம் இன்று உயிர் வாழ்வது எல்லாம் போராளிகளினல் தான்! அவர்கள் கடற்கரையில் ''சென்றி'' போட்டிருப்பதால்தான் நாம் சில மீன்களையாவது பிடிக்க முடிகின்றது.

நாம் வள்ளங்களைக் கடற்கரையிலேயே விடமுடியாத நிலைமையைப் பாருங்கள் என எடுத்துக் காட்டிய அவர்கள் இராணுவ நடவடிக்கையால் சூட்டுக்கு இலக்கான சிவகாமி, எம். ஜி. ஆர். ஆகிய பெயர்கள் கொண்ட வள்ளங்களைக் காட்டினார்கள்.

மேலும் வரதராஜா என்பவரின் வள்ளம் முற்றாக எரிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினர். தமக்கு எப்போது தான் இனிவளமான வாழ்வு கிடைக்கும் என என்னையே திருப்பிக்கேட்டனர். இதற்கு என்னதான் பதில்?

இன்பருட்டியில் மாத்திரம் கடல்தொழிலை இழந்து கஷ்டப்படும் குடும்பங்கள் இருநூறுக்குமேல் அடங்கும்!

### சூனியப் பிரதேசமான சுப்பர் மடம்

இன்பருட்டியில் இருந்து கிழக்கே இராணுவ முகாமுக்கு அருகில் இருந்த மீனவக்குடியிருப்பு சுப்பர்மடம் அந்த இடத்துக்கு எவருமே போக முடியாத நிலை.

இராணுவ முகாம் அந்த இடத்தை கபளீகரம் செய்து விட்டது. அங்கு மீனவர்கள் குடியிருந்த வீடுகள் இராணுவத்தால ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அங்கிருந்த 300க்கும் மேற்பட்ட மீனவக்குடும்பங்கள் நாகர்கோயில் தம்பசிட்டி ஆகிய இடங்களுக்கு அகதியாக இடம்பெயர்ந்து சென்றுவிட்டன.

'சென்ற மாதத்திலே எமது தந்தையும் தாயும் எம்முடன் இருந்தனர். இன்று இல்லை'' எனப்பண்டைத் தமிழ் இலக்கியத்தில் பாரி மகளிர் பாடினர். அத்தகைய வரலாறே அங்கு வாழ்ந்த மக்களுக்கு எஞ்சியுள்ளது. கடல்வலயச் சட்டத்தால் மீனவர் மாத்திரமன்றி எமது இனமே அழிவின் விளிம்பில் நிற்கின்றது.

## பேராதனை செல்லும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு...!

[யாழ்ப்பாணம்]

பேராதனை பல்கலைக்கழகத்துக்கு 23 ம் திகதி அன்று செல்வதற்கு ஒரு பஸ் வண்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பஸ்ஸில் செல்ல விரும்பும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் தங்கள் அடையாள அட்டையுடன் யாழ்பாண பல்கலைக்கழகத்தில் (சனிக்கிழமை) இன்று காலை 10 00 மணிக்கு வந்து ரூ 125 செலுத்தி தம் பெயரைப் பதிவு செய்து கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்ல விரும்புபவர்களுக்கும் மத்திய கிழக்கில் சாரதிகளாக, பணிப்பெண்களாகத் தொழில்புரிய செல்பவர்களுக்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு: மல்ரி சேவிசஸ்,
37, (351), மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் தியேட்டர் சந்திக்கருகில்),
யாழ்ப்பாணம். [C-2976]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க் ★ சவூதி அரேபியா

1. கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.
2. சவூதி அரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர்களுக்கான பிரயாண ஒழுங்கு உடன் செய்து கொடுக்கப்படும்.
3. செல்ல விரும்புவோர் யூன் 25-ந் திகதிக்கு முன்பாக கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்
4. எமது பிரயாண முகவர் கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு உங்களை உடன் அழைத்துச் செல்வார்.

தொடர்பு:
N.BALA, திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
பிற் குறிப்பு:- (764 பஸ்-பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை) (C2920)



## பிரயாண ஒழுங்கு

எங்கள் முகவர் உங்களை உடன்
டென்மார்க் கொழும்பில் இருந்து
குறைந்த செலவில் நேரே அழைத்துச் செல்வார்.

இங்கிருந்து ஞாயிற்றுக்கிழமை (22-6-86)
கொழும்புக்குப் புறப்பட ஏற்பாடுகள் செய்துள்ளோம்.
உடன் தொடர்பு கொள்ளவும்:

சவுதியில் வருமான வாய்ப்புகள்
உடன் செய்து கொடுக்கப்பாடும்.

GROUP ATLANTIC,
(அடைக்கலமாதா கோவிலுக்கு அருகாமை)
163, Hospital Road, Jaffna.
(A 741)



## அரிய சந்தர்ப்பம்

புதிய பதிவாளரின் நேரடி மேற்பார்வையின்கீழ்
உள்ளூரிலும் வெளியூரிலும்
வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு ஏற்றவாறு
யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின்
அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கமைய

பின்வரும் பாடநெறிகளுக்கான
பகுதிநேரப் பயிற்சியும், போதனையும்

2-7-1986 புதன்கிழமை ஆரம்பமாகும்.

1. மோட்டார் மெக்கானிசம் (Motor Mechanism) 6 மாத கால பயிற்சி
2. கடைச்சல் யந்திர இயக்குநர் (Lathe Operator)
3. எலெரிக் வெல்டிங் (Arc Welding)
4. வீட்டு மின் இணைப்பு (Electrical House Wiring)

(2–4: 3 மாத கால பயிற்சி)

5. QUANTITY SURVEYING PARTS I and II — 6 Months
6. DIPLOMA in HOTEL MANAGEMENT — 3 Months
7. FRENCH and GERMAN LANGUAGES TAUGHT TO READ, WRITE and SPEAK — 2 Months
(Week days and weekend Classas)

Details from: REGISTRAR,
PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,
59, ST, PATRICK'S COLLEGE ROAD, JAFFNA.
(A 740)


# இன்றைய பலன்

மாதம்- ஆனி
திகதி- (7 (1986-6-21)
கிழமை- சனி
திதி- திரயோதசி
பி ப வரை
நக்ஷத்திரம்- அனுசம்
பி. இ வரை

மேடம்- சூழ்ச்சி வலை விரிக்கும். வழக்கு விவகாரம் ஏற்படலாம் வீண் செலவுண்டு. தெய்வ நம்பிக்கை நன்று,

இடபம்- கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. பசுமையான எண்ணங்கள் அலைமோதும். களஸ்திரவழித் தனவரவுக்கும்இடமுண்டாம்.

மிதுனம்- கடன் தொல்லை அதிகரிக்கும் குடும்பப் பிளவுகள் ஏற்படும் மனத்தளர்ச்சி ஏற்படும். நிதானம் வேண்டும்.

கடகம்- புண்ணிய யாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம். பெரியோர் ஆதரவு கட்டாயம் கிடைக்கும் பிதாவழிப் பெருமையும் உண்டு

சிங்கம்- உண்மை வழிநின்று உயர்வடைவீர்கள் தொழிலில் லாபம் கிட்டும். நிலை மாற்றமும் ஏற்படலாம் வாழ்க்கையும் மலரும்.

கன்னி- செல்வாக்குப் பெருகும் வரவில் உயர்வு தென்படும். பிறர் பொருள் வரவும் தெய்வ அருளும் உண்டு

துலாம்- பணமுடக்கம் மனத்திடத்தைக் குறைக்கும் திரைமறைவில் சதித்திட்டம் நடைபெறும். கவனம் வேண்டும்.

விருச்சிகம்- மனதில் அமைதி குன்றும் அயலவர்களின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும். அவசர முடிவைத் தவிர்க்கவும்.

தனுசு- கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும். நீண்டநாள் அபிலாஷை இன்று நிறைவேறும்.

மகரம்- அமைதிக்குப் பங்கம் ஏற்படும் நெருங்கிய ஒருவரின் உடல்நலம் பாதிக்கப்படலாம். குறைகேட்க நேரும்.

கும்பம்- கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் பொருளாதாரநிலை குன்றும் வாகனச் சாதனங்கள் அவதானம் வேண்டும்.

மீனம்- புதிய வழிகளில் பொருள்வரவிற்கும் இடமுண்டு. புத்திர வழியாலும் புகழ் பரவும். தொழிலும் மந்தநிலை காணப்படும்.

திருமலை ரவீந்திரன்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

உடுப்பிட்டியைச் சேர்ந்த பொன்னையா குமாரசாமி மகள் பரமேஸ்வரியின் மரணசாதன மில்லாச் சொத்துவிடயமாக;

— இறந்தவர்
பொன்னையா குமாரசாமி சுந்தரலிங்கம், மணிமாளிகை, உடுப்பிட்டி.

— மனுதார்
மரணசாதன நியாயாதிக்க வழக்கிலக்கம்: /1238 T.

எதிராக

1. குமாரசாமி சண்முகலிங்கம், மங்கையில்லம், சந்தை வீதி, உடுபபிட்டி.
2. குமாரசாமி மகாலிங்கம் ஈஸ்வரி வாசா, மாலி சந்தை, அல்வாய்.
3. குமாரசாமி ஆனந்தராசா,
4. பெண் தவமணி, இருவரும் நகரசபை குடிமனை, திருகோணமலை.
5. சின்னத்துரை துரைராசா,
6. பெண் நகுலேஸ்வரி. இருவரும் 509, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
7. பொன்னுத்துரை தயானந்தம்,
8. பெண் மங்களேஸ்வரி, இருவரும் 24/1, மதவடி ஒழுங்கை, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

— எதிர்மனுதார்கள்

மேலே பெயர் கொண்ட மரணச்சொத்து வழக்கில் மேலே குறிப்பிட்ட இறந்த போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ம் திகதி இந்நீதிமன்றில் காலை 9-30 மணிக்கு தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதுஎன்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1986-ம் ஆண்டு தை மாதம் 29-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
சண்முகம் நடராசா
பதிவாளர்

வரைவு:
[illegible]
மனுதாரின் சட்டத்தரணி
[C-2930]

## [illegible]டும் தெரிவு

(புலோலி)

பருத்தித்துறை புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச்சங்க இயக்குநர்சபைத் தலைவராக முன்னாள் தலைவர் திரு கே. சிவப்பிரகாசம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் வட-இந்து மகளிர் கல்லூரியில் திரு பீ. சவரிமுத்து தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திரு. எஸ். கிருஸ்ணர் திரு. எம். கனகசபாபதி ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

உபதலைவராக திரு. எஸ். சின்னத்தம்பியும், செயலாளராக திரு ரீ. ஈஸ்வரனும் இயக்குநர்சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் க. கிருஸ்ணபிள்ளை, ஆ. கந்தசாமி, வி. வேலுப்பிள்ளை, கே. சிதம்பரம், சண். பாரதிதாஸன், எஸ். தெய்வேந்திரம் ஆகியோரும் சபையின் ஆலோசகராக திரு வ சின்னத்தம்பியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இன்று முதலுதவிப்படைப்பிரிவு அங்குரார்ப்பணம்

(பண்டததரிப்பு)

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படையின் உடுவில் புதுமட, மல்வம், சத்தியபுரம் படைப்பிரிவின் அங்குரார்ப்பண வைபவம் இன்று உடுவில் கர்த்தர்கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம அதிதியாக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகுநதன் இன்னாசித்தம்பி கலந்து கொள்வார். முதலுதவிப் பயிற்சிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களையும் அவர் வழங்குவார்.

## மின் தடை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் - இலங்கை மின்சார சபையின்

### முக்கிய அறிவித்தல்

1986-06-22ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலைகள் காரணமாகக் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 2-00 மணிவரை யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பின்வரும் உப மின் கலையங்களுக்கு மின் விநியோகத் தடை ஏற்படுமெனச் சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

உப மின் நிலையங்கள்:-

1. கன்னுதிட்டி
2. R. G. இன்டஸ்றீஸ்
3. ஐந்து சந்தி
4. மனோகரா
5. தட்டா தெரு
6. கலட்டி

இம்மின் தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு,
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
[A855] சுன்னாகம்,


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்
(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

(25-ம் திகதி எமது முகவர் கூட்டிச் செல்வார்.)
எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள்
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ லிபியா ★ குவைத்
★ சவூதி அரேபியா
ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.
அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல் ஏஜென்சி,
125, (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்
பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(C 2991)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



மணிக்கூண்டு வீதியிலுள்ள வடஇலங்கை நெசவாளர் சங்கக் கட்டடம் ராணுவ தாக்குதலால் சேதமடைந்தது. இச்சங்கத்தின் புதிய விற்பனை நிலையம் நல்லூரில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இம் முயற்சிக்குக் கைகொடுத்து கணிசமான உதவி வழங்கிய 'மில்க்வைற்' அதிபர் திரு. க.கனகராசா புதிய சங்கத்திறப்பு விழாவில் வியாபாரத்தை வைபவரீதியாகத் துவக்கி வைக்கும் காட்சி இது.

# "குருநகர் மீனவர் இழப்பினால் தொழிலாளர் வர்க்கமே சோகத்தில் ஆழ்ந்துள்ளது"

[யாழ்ப்பாணம்]

"குருநகர் கடற்றொழிலாளர்கள் எமது சமாசத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அடிப்படையாக நின்று உழைத்தவர்கள். அரசினரின் கடல், வலயச் சட்டத்தினாலும், மீன் பிடித் தடைச் சட்டத்தினாலும் வறுமையின் எல்லைக்கே தள்ளப்பட்டவர்கள். இத்தகைய நலிந்துகொண்டிருந்த தொழிலாள மக்கள் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டது மிகவும் மிலேச்சத்தனமானது. அவர்களது இழப்பினால் தொழிலாளவர்க்கமே சோகத்திலும், துயரிலும் ஆழ்ந்துள்ளது உயிரிழந்த தொழிலாளர்களின் உறவினர்களுக்கும், குருநகர் மக்களுக்கும் எமது ஆழ்ந்த கவலையும் அஞ்சலியும் சமாசத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்".

இவ்வாறு இம்மாதம் 10ம் திகதி மண்டைதீவில் கொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களுக்கும் அஞ்சலிசெலுத்துமுகமாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திய அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய மேற்படி சமாசத்தின் உப தலைவர் திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை கூறினார்.

இவ்வஞ்சலிக்கூட்டம் 11ந் திகதி சமாசக் காரியாலயத்தில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் இறந்த தொழிலாளர்களுக்காக சில நிமிடங்கள் மௌனமாகப் பிரார்த்திக்கப்பட்டது.

தொடர்ந்து பேசிய பொது முகாமையாளர்திரு இ. இராஜாராம், "குருநகர்கடற்றொழிலாள மக்கள் எமது சகோதரர்கள். எமது சமாசத்தின் வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டவர்கள். எமக்குத் துன்பம் வந்துற்ற போதெல்லாம் துயர்துடைக்க ஓடி வருபவர்கள். குறிப்பாக குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் உதவிகள் காலத்தால் மறக்கமுடியாதன. இந்நிலைமையில் குருநகர் மக்களின் படுகொலை சகிக்கமுடியாது, தாங்கமுடியாத பேரிழப்பாகும். அந்த மக்களுக்கு ஆழ்ந்த கவலையும் அஞ்சலியும் செலுத்துகிறோம்" என்று கூறினர்.

அடுத்துப் பேசிய கணக்காளர் திரு. ஐ பொன்னம்பலம், இந்த நாட்டின் முதுகெலும்பான தொழிலாள வர்க்கம் இத்தகைய கேவலமான முறையில் அரசபடைகளினால் படுகொலை செய்யப்பட்டது சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் மாபெரும் சக்தியை அறியப்படாத தன்மையேயாகும் எனக்குறிப்பிட்டதுடன் தமிழ்மக்கள் இன்றுபடும் இன்னல்கள், துயரங்களை எமது ஐக்கியத்தின் மூலமே வென்றெடுக்க முடியும். இதற்கு தொழிலாளர்களின் சக்தி அடிப்படையானது. காட்டுமிராண்டித்தனமாக படுகொலை செய்யப்பட்ட கடற்றொழிலாள மக்களின் குடும்பத்திற்கும். உறவினருக்கும் எமது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்ளுகிறேன் என்றார்.

இறுதியாகப் பேசிய மண்டைதீவு மீன்தூள் ஆலைமுகாமையாளர் திரு. கா.கதிர்காமராஜா குறிப்பிடுகையில் சமாசத்தினால் மண்டை தீவில் இயங்கிவரும் மீன்தூள் ஆலை இன்று சர்வதேச தரத்தில்மீன் தூள் உற்பத்திசெய்யும் அளவுக்கு உயர்வு பெற்றதற்கு அடிப்படையான காரணம் குருநகர் கடற்றொழிலாள மக்கள் வழங்கிய ஒத்துழைப்பும் உதவியுமே. எந்தநேரத்திலும் மனம் சலிக்காமல் எமது ஆலைக்குத் தேவையான மீனை விநியோகம் செய்ததுடன், ஆலைக்கும் சமாசத்திற்கும் இடைஞ்சல் இக்கட்டுகள் நேர்ந்த போதெல்லாம் துணைக்கு ஓடிவந்து ஆதரவு தந்தவர்கள். அத்தகைய மக்களின் படுகொலை கண்டு மனித இதயம் படைத்த எவருமே கலங்காமல் இருக்க முடியாது. எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் சமாசஊழியர்கள் சார்பிலும் மீன்தூள்ஆலை ஊழியர்கள் சார்பிலும் உயிர் இழந்த மக்களின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று கூறி முடித்தார்.

மற்றும் திரு.ம பாலநாதன், திரு. டானியல் அன்ரனி, திரு. சி. தர்மகுலசிங்கம் ஆகியோரும் பேசினர்.

## இன்று திருவிளக்கு பூசை

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து இவ்வருடத்தின் 8-வது திருவிளக்குப் பூசையும் நடைபெறவுள்ளது. இப் பூசையில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே தத்தம் பெயர்களை ஆலயத்தில் பதிவு செய்தல் நலம் என அறிவிக்கப்படுகிறது.

இதனிடையே, ஆலய திருப்பணிகளுக்காக நிதிசேகரிக்கும் பொருட்டு ஆலய[illegible] தானப் பணியில் தோத்திர மாலை திருவிளக்கு பூசை வழிபாடு" என்ற புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்.

கொக்குவில் மேற்கு சூடு வெந்தான் பிள்ளையார் கோவிலில் திருவிளக்கு பூசை இன்று மாலை - ஆறுமணிக்கு நடை[illegible]பெறும்.

## மாணவருக்கு புலமைப் பரிசில்

[கிளிநொச்சி].

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி பயிலும் ஆறு மாணவர்கள் யாழ் கல்வித் திணைக்கள புலமைப்பரிசிலை பெறுகின்றனர். 1984ம் ஆண்டிற்கான க. பொ. த. சாதாரணதர' வகுப்பிற்கான புலமைப்பரிசிலையே இவ் ஆறு மாணவர்களும் பெற உள்ளனர்.

ஏ. கல்யாணி, ஏ. சர்மலா, என். பவனந்தன், ரி. தர்மசிங்கம், ரி. கௌரியம்பாள், ரி. கதிரவேல் ஆகியோரே யாழ் கல்வித்திணைக்கள புலமைப்பரிசிலை பெறுகின்றனர், இம் மாணவர்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் எஸ். எஸ். குகதாசனும் கல்வித் திணைக்களமும் பாராட்டி உள்ளது.

## மக்கள் பீதியால் இடம் பெயர்வு

[புங்குடுதீவு]

புங்குடுதீவின் கரையோரப் பிரதேசங்களில் உள்ள மக்கள் கடற்படையினரின் அதிகரித்த ரோந்து காரணமாக ஊரின் நடுப்பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்.

கண்ணகை அம்மன் கோவிலடி, குறிக்கட்டுவான், மடத்துவெளி, வல்லன், கழுதைப்பிட்டி போன்ற இடங்களில் உள்ள மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

அண்மைக் காலங்களில் புங்குடுதீவைச் சுற்றியுள்ள கடற் பிரதேசங்களில் கடற்படையினரின் ரோந்து அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணமென்று கூறப்படுகின்றது.

## இன்று கருத்தரங்கு

[உடுவில்]

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் உற்பத்திப் பெருக்கக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற உள்ள இக்கருத்தரங்கிற்கு திரு. பொ. செல்வரத்தினம் தலைமை வகிப்பார்.

பல நோக்க கூட்டுறவு சங்க தலைவர் திரு. எஸ். குமாரமேலு விழாவை ஆரம்பித்து வைப்பார்.

மில்க்வைற் தொழிலதிபர் திரு கே. கனகராசா விவசாயபகுதி உதவி பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை, கமநலசேவை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் டாக்டர் டி குணராயசிங்கம் ஆகியோர் கால்நடை பராமரிப்பு விவசாயஉற்பத்தி பற்றி கருத்துரை வழங்குவர்.

[சிவ]

## புராண படன படிப்பும் விரிவுரையும்

[சுண்டுக்குளி]

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயிலில் முதற் தடவையாக சென்ற வாரத்தில் இருந்து கந்த புராண படன படிப்பும் விரிவுரைகளும் நடைபெற்று வருகின்றன.

இவை தொடர்ந்து மூன்று மாதங்கட்கு நடைபெற உள்ளன.

# பாடசாலை கிரிக்கெட் வெற்றிகள்: 17 - வயதில் பற்றிக்ஸ் 15 - வயதில் சென்.ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், 17-வயது பிரிவில் சென். பற்றிக்ஸும், 15 வயதுப் பிரிவில் சென். ஜோன்ஸும் வெற்றிபெற்றன.

17வயதுப் பிரிவில் மேற்படி இருகோஷ்டிகளிடையே நடைபெற்றபோட்டியில் சென். பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் கூடிய ஓட்டங்களைப்பெற்றமையால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 9 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 187 ஓட்டங்களைப் பெற்றது. ஏ. எம். நிர்மலராஜா சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 77 ஓட்டங்களைப் பெற்றார். பி. ரவிராஜன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்

சென். ஜோன்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. என்: ரவீந்திரன் 40 ஓட்டங்களைப் பெற்றார், வி. ஆர். திலகராஜா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

### சென். ஜோன்ஸ் வெற்றி

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் 15 வயதுக் குட்பட்டவர்களிடைய நடைபெற்ற ரசிப்பான போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 128 ஓட்டங்களைப் பெற்றது. எம் பி. இராசநாயகம் 55 ஓட்டங்களையும், ஏ. ஐஸ்ரின் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 148 ஓட்டங்களைப் பெற்றது எஸ். என் புவனரத்தினம் 51 ஓட்டங்களைப் பெற்றார்

ராஜநாயகமும், ஜஸ்ரீனும் தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்கள் (வி)

## சைவப்புலவருக்கு பவளவிழா

[யாழ்ப்பாணம்]

சைவப்புலவர் திரு சி.வல்லிபுரம் அவர்களின் பவளவிழாவும், மலர் வெளியீடும் வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணியளவில் நடைபெறவுள்ளது.

திரு. சூரன் ஏகாம்பரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி உட்பட பல கலாசாரத்துறைப் பிரமுகர்கள் கலந்து சொற்பொழிவாற்றவுள்ளனர். [ஷ]

## பயிற்சி வகுப்புகள்

(புலோலி)

பருத்தித்துறை ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களின் இணைப்புக்குழு பருத்தித்துறைப்பகுதி பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவ மாணவிகளின் நலன்களைக் கருத்திற்கொண்டு பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

மாணவர் சுகாதார அமைப்புக்களின் கோரிக்கைகளையடுத்தே இந்நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளதாக பருத்தித்துறை ஆரம்ப சுகாதார கவனப்பு நிலையங்களின் இணைப்புக்குழுத்தலைவர் தெரிவித்தார்.

கடந்தவாரம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் "முதலுதவியும் தற்காப்பும்" பற்றிய கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் இரண்டுவாரகால பயிற்சி சிகிச்சைமுகாமொன்று நடைபெற்று வருகின்றது. பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரியில் முதலுதவிப்பயிற்சிவகுப்புகளும்நடாத்தப்பட்டு வருகின்றன.

## மகோற்சவம்

(சுண்டுக்குளி)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் என வழங்கும் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோவில் மகோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெற உள்ளது.

இவ் விழாவில் ஆடி மாதம் 5ந் திகதி சப்பரத் திருவிழாவும், 6 ந் திகதி தேர் உற்சவமும் 7 ந் திகதி தீர்த்தோற்சவமும் 8 ந் திகதி பூங்காவனமும் நடைபெறவுள்ளது.

## இன்று

[யாழ்ப்பாணம்]

இலங்கை முற்போக்குஎழுத்தாளர் சங்கம் நடாத்திவரும் நோன்மதிக் கருத்தரங்கு வரிசையில், இன்று சனிக்கிழமை காலை 10மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் 'நந்தி' தலைமையில் நடைபெறுகின்ற கருத்தரங்கில் கலாநிதி சி. மௌனகுரு 'நவீன நாடக அரங்கியல் வளர்ச்சி' பற்றி உரையாற்றுவார்.

## யாழ்ற்ரன் மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்]

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு கே. கே. நடராஜா தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு வடமாநில கல்வி அதிகாரி திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். (சிவ)

## முகாம்வாசலில் கைது

[பூநகரி]

வரணியைச் சேர்ந்த வே. மணிவண்ணன் பல்லவராயன் கட்டு ஜெயபுரம் என்ற கிராமத்திற்குச் செல்லும்போது பூநகரி 4-ம் கட்டை இராணுவத்தினரால் முகாம் வாசலில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

லிடோ
காலை 10-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
தாயில்லாமல் நானில்லை
(கலர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 21-6-86

## சீனிக் கப்பல் இன்று வரும்

[யாழ்ப்பாணம்]

இன்று 950 தொன் சீனி மூடைகளுடன் 'மேர்க்ஸ் மாத்தறை' என்னும் சீனிக்கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தைவந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. [வா]

### கொழும்பு-யாழ். தனியார் பஸ் மீது

# வென்னப்புவவில் தாக்குதல்; சாரதி உட்பட 6 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ்ஒன்று கடந்த புதன் கிழமை நள்ளிரவு வென்னப்புவவில் வைத்து தாக்கப்பட்டதால்பஸ்பலத்தசேதமடைந்ததுடன் சாரதி உட்பட 6 பிரயாணிகள் காயமடைந்தனர்.

வென்னப்புவவில் அன்றிரவு சைக்கிளில் சென்ற ஒருவர், தனியார் பஸ் ஒன்றினுல் மோதப்பட்டு பலியான சம்பவத்தின் எதிரொலியாகவே, இத்தாக்குதல் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

பஸ்மீது தாக்குதல் நடந்த சமயம் நீர்வேலியைச் சேர்ந்த பிரயாணி ஒருவர் பயத்தினுல் வெளியில் குதித்தபோது காலில் முறிவு ஏற்பட்டது, மற்றொருவருக்கு கையில் பலத்த காயம் ஏற்பட்டது.

இச்சம்பவத்தின்பின் குறித்த அந்தபஸ் அப்பகுதிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகள் பின்னுல் வந்த மற்றொரு தனியார் பஸ்ஸில் ஏறி, முல்லைத்தீவில் ஏற்பட்ட பதற்றத்திஞல் ஒருநாள் தரித்துநின்று பின்னர் நேற்று நண்பகல் யாழ்நகர் வந்தடைந்தனர்.

தாக்கப்பட்ட பஸ்ஸில் சில பிரயாணிகள் தங்கள் பொருட்களை தவறவிட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## வவனியாவில் 12 பேர் கைது

(வவனியா)

வவனியா மஹாறம்பைக் குளத்தை நேற்று அதிகாலை சுற்றி வளைத்த ஆயுதப்படையினர் பன்னிரெண்டு பேரைக் கைது செய்து கூட்டிச் சென்றனர்.

இவர்களில் ஏழுபேரின் பெயர் விபரங்கள் தெரிய வந்துள்ளன, ஆ. தர்மராசா 24 வயது [ஐந்து பிள்ளைகளின் தந்தை), த. சுந்தரம் (18 வயது), ஆ. செல்வராசா 30 வயது (நான்குபிள்ளைகளின் தந்தை), ரா. சந்திரன் 29 வயது (மூன்று பிள்ளைகளின் தந்தை), த. பழனிசாமி 31 வயது (மூன்று பிள்ளைகளின் தந்தை), ம. குமாரசாமி 28 வயது (இரண்டு பிள்ளைகளின் தந்தை], வ. சுந்தரம் (21 வயது). (பி)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் 'ஹெலி' பொம்பர் தாக்குதல்

[ஒட்டுசுட்டான்]

புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொம்பர், ஹெலிகொப்டர் தாக்குதலில் சிலர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு இராணுவமுகாமில் இருந்து கடற்கரை வழியாக இரவு வேளையில் நடைபவனியாகவந்து புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில்தங்கியிருந்த இராணுவத்தினரை பாதுகாப்பதற்காக ஹெலிகொப்டரிலும் பொம்பர் விமானங்களிலும் வந்த இராணுவத்தினர் இத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பேராளிகள் பலமணிநேரம் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டனர். [க]

### கரடிப்போக்கில்

## இராணுவம் புலிகள் நேரடி மோதல்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி பொலிஸ் இராணுவகூட்டு முகாமிலிருந்து நேற்றுக்காலை வெளிவந்த இராணுவத்தினர் கரடிப்போக்குச் சந்திவரை நடந்து வந்த பொழுது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் எதிர்க்கொண்டு தாக்குதல் மேற்கொண்டனர்.

இத் தாக்குதலின் பின்னர் இராணுவத்தினர் மீண்டும் முகாமுக்குத் திரும்பிவிட்டனர்

இச்சம்பவத்தில் ஏற்பட்டுள்ள சேதவிபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (மா)

## ஆச்சிரமத்தில் அருட்சகோதரர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாழ்வு பாராமல் தெய்வீகத் தொண்டு செய்பவர்கள்.

யாழ். மாவட்டத்து மண்ணிலே உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கொண்டு பலவித தயாரிப்புக்களைச் மக்களுக்கு அறிமுகம் செய்தனர். இச்சபையினர் குறிப்பாக தோலகட்டி ஆசிரமத்தில் சுகாதார-வைத்திய நடைமுறைக்கேற்ப உற்பத்தி செய்யப்படும் நெல்லிரசம், முந்திரிகை 'வைன்', போன்ற நாஞவித உற்பத்திப் பொருட்களுக்கு இந்த நாட்டு மக்கள் மத்தியில் இருக்கும் மதிப்பு தரமானது.

இந்த ஆச்சிரமத்தில் ஒரு வணபிதாவும் ஆறு அருட் சகோதரர்களும், மற்றும் பொதுசன ஊழியர்களும் இருந்தனர்.

நேற்றுக்காலை 10-30 மணியவில் பலத்த குண்டுவெடித்த சத்தம் கேட்டது. இதனைத் தொடர்ந்து வசாவிளான் சந்தியில் சென்றிக்கு நின்ற இராணுவத்தினர் ஆச்சிரமத்தைநோக்கிச் சென்றனர், ஆச்சிரமத்தின் வசாவிளான் - அச்சுவேலி வீதியின் தெற்குப்பக்கமாகவுள்ள பழைய தோலகட்டி ஆச்சிரம வளவுக்குள் இராணுவத்தினர் புகுந்தனர்.

வளவுக்குள் நின்ற அருட் சகோதரரை நோக்கி வினு எழுப்பிய இராணுவத்தினர், அவர்எதுவும்பேசாமல்மௌனமாக இருந்ததைத் தொடர்ந்து அவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துவிட்டு அவ்விடத்தை விட்டு தமது இடத்தை நோக்கிச் சென்றனர்.

அவர்கள் செல்லும்பொழுது 'தீவிரவாதிகள்' சுட்டதாகக் கூறும்படி சொன்னுர்களாம்.

கொலையுண்ட சகோதரரின் பிரேத நல்லடக்கம் இன்று காலை 10-30 மணிக்கு தோலகட்டியில் நடைபெறும். [வ-மா]

## இன்று நலன்புரிச்சங்க அங்குராப்பண கூட்டம்

(புலோலி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் இன்று வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இன்று 'தாயகமே தாகம்'

[யாழ்ப்பாணம்]

தமிழர் கலாச்சாரவட்டம் வழங்கும் 'தாயகமே தாகம்' என்றவீடியோ படம் இன்று சனிக்கிழமை காலை யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத் நடைபெறவுள்ளது. [மா]

### ஆறு லட்சம் பெறுமதியான

# சவற்காரம், தீப்பெட்டி விஸ்வமடுவில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

சுமார் ஆறுலட்சம் ரூபா பெறுமதியான சவர்க்காரம், தீப்பெட்டி போன்ற பொருட்கள் கடந்த 14ம் தேதி விஸ்வமடுவில் லொறியுடன் கடத்தப்பட்டடுள்ளதாக யாழ். வர்த்தகர் சங்கத்திற்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். வர்த்தகர் சங்க முன்ஞள் தலைவர் திரு. எஸ். வி. முருகேசு நேற்று இப்புகாரைச் செய்துள்ளார்.

இவ்விடயமாக சங்க ஆட்சிக்குழு விரைவில் கூடி தீர்க்கமான முடிவு எடுக்கும் என்று சங்க செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் தெரிவித்துள்ளார். [க]

## ஊரடங்கு

(கொழும்பு)

திருகோணமலை நிர்வாக மாவட்டத்தில் நேற்றிரவு 7 மணி தொடக்கம் இன்று அதிகாலை 5 மணிவரை ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. (சிவ]

## இனப்பிரச்னை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனது கன்னிப் பேச்சில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "வட பகுதி மக்கள் சிங்கள, முஸ்லிம் மக்களை தமது எதிரிகளாகக் கருதக் கூடாதென்ருர். [சிவ]

## ப. நோ. கூ. சங்க தலைவர்கள் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களின் கூட்டம் இம்மாதம் 23ந்திகதி திங்கள் யாழ் நகர், 3ம்குறுக்குத் தெருவிலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் உணவு விநியோகம், வங்கிச் சேவைகள், கூட்டுறவு இயக்கத்தின் 75ம் ஆண்டுநிறைவு ஆகியவிடயங்கள்பற்றி ஆராயப்படுமென்று யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு சி. சிவமகராசா தெரிவித்துள்ளார். (க)

## விசேஷ பஸ்வண்டி

[யாழ்ப்பாணம்]

புத்தள மாவட்டத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இன்று காலை யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்திற்கு சமூகம் தந்து அநுராதபுரம் செல்வதற்கான பஸ்கட்டண ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்நகரிலிருந்து இவ்விசேஷ பஸ் வண்டி புறப்படவுள்ளது.

## யாழ்.தொலைத்தொடர்பு காரியாலயம் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ். தொலைத்தொடர்பு நிலைய காரியாலயம் ஆரியகுளம் சந்திக்கு சமீபத்தில் உள்ள கட்டிடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது. [க]

## யாழ்— கொழும்பு பஸ்சேவை

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி ஊடாக நேற்றும் எந்தபஸ்களும் செல்லவில்லை. முல்லைத்தீவு பஸ்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து திரும்பின,

சில தனியார் பஸ்கள் நேற்று யாழ். நகரிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றன. நேற்று முன்தினம் காலை இங்கிருந்து கொழும்புக்குப் புறப்பட்ட தனியார் பஸ்கள், முல்லைத்தீவில் தரித்துநின்று நேற்றுக் காலை மீண்டும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டன. கொழும்பிலிருந்து புறப்பட்ட தனியார் பஸ்கள் நேற்று வந்துசேர்ந்தன. [க]

## சாம்பல்தீவு....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வந்தனர். புதுக்குடியிருப்பில் வைத்து சிறீலங்கா இராணுவத்தை எதிர்கொண்ட மக்கள் விடுதலைப் படையினர் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர். ஏழு மணித்தியாலங்களாக மக்கள் விடுதலைப் படையினர் தொடர்ச்சியாக நடத்திய தாக்குதலால் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இதேவேளை பொம்பர் விமானமும் இரு ஹெலிகொப்டர்களும் மக்கள் மீது நடாத்திய தாக்குதலால் இரு வயோதிபர்கள் பலியாஞர்கள். மேலும் இருவர் சுடப்பட்டனர்.

மக்கள் விடுதலைப்படையின் தாக்குதலால் தமது தாக்குதல்களை தொடரமுடியாமல் சிறீலங்கா படைகள் பின்வாங்கி விட்டன. மக்கள் விடுதலை படை வீரர்கள் தரப்பில் எது வித இழப்புமில்லை.

## இன்று

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் பிரஜைகள் குழுவின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மாகாணசபை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாற்பட்டதாகவே இருக்கும்.

"சட்ட ஒழுங்குகள் மற்றும் காணிக், குடியேற்றங்களிலும் மாகாண சபைகளுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களே வழங்கப்பட்டுள்ளன. இன விகிதாசார அடிப்படையில் இந்த குடியேற்றங்கள் அமையும்.

"மாகாண சபைகளுக்கான பொலிஸ் நியமனம், பொலிஸ் அதிபரின் தரத்தில் மட்டுமே அமையும் இராணுவம், கடற்படை விமானப்படை என்பன மாகாண சபைகளின் கட்டுப்பாட்டுக்குள் அடங்க மாட்டாது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-பி)


# மரண அறிவித்தல்

### சிவகாமியம்மா துரைச்சாமி

சுதுமலையைச் சேர்ந்த சிவகாமியம்மா துரைச்சாமி 19-06-1886 ல் காலமானுர். இவர் காலஞ் சென்ற வைத்திலிங்கம் துரைச்சாமியின் அன்பு மனைவியும், லோகநாதன், சச்சிதானந்தன் (Sabah), ஞானசோதி (Brunei), வைத்தியலிங்கம் ஆகியோரின் அன்புத்தாயாரும், நமசிவாயம் (Brunei), சரோஜினிதேவி, புவனேஸ்வரி, (ஆசிரியை, சுதுமலை சின்மய பாரதிவித்தியாசாலை), சுலோசனுதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர். அன்னரின் ஈமக்கிரிகைகள் 22-06-1986 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தாவடி மயானத்தில் தகனக் கிரிகைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

(C 3010)

### திரு. மிக்கேல் ஞானப்பிரகாசம் (துரைமணி)

(இறையியல் கல்விமாணவன் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம், சுன்ஞகம்)

நெடுந்தீவைப்பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சி திருநகரில் வசிப்பவருமான மிக்கேல்-ஞானப்பிரகாசம் அகாலமரணமாஞர். இவர் மிக்கேல் மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கலாவின் அன்புக் கணவரும், யூஜினின் அருமைத்தந்தையும் ஐயாமணி, காலம் சென்ற ராசு, காலம் சென்ற யெரூன் ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரனும், இராசாத்தியின் மைத்துனரும், அமலீன், ஜெனி, ரஜனி ஆகியோரின் சித்தப்பாவுமாவார். அன்னரின் பூதவுடல் நேற்று (20-6-86) பிற்பகல் 5 மணியளவில் கிளிநொச்சி, உருத்திரபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஐயாமணி, உருத்திரபுரம். [C 3018]


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org